**செய்தி வெளியீடு எண்:694** **நாள்:16.10.2017**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு பால் வளத்துறை அமைச்சர் உயர்திரு.கே.டி.ராஜேந்திர பாலாஜி அவர்களால் இன்று (16.10.2017) ஆவின் பணியாளர்களுக்கு தீபாவளி பண்டிகையொட்டி, போனஸ் மற்றும் ஊக்கத்தொகை வழங்கப்பட்டது.

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தைச் சார்ந்த 2343 பணியாளர்களுக்கு ரூ.269.94 இலட்சமும், மாவட்ட ஒன்றியங்களைச் சார்ந்த 3105 பணியாளர்களுக்கு ரூ.486.77 இலட்சமும் என ஆக மொத்தமாக 5448 பணியாளர்களுக்கு ரூ.756.71 இலட்சம் ரூபாய் போனஸ் மற்றும் ஊக்கத்தொகை இன்று (16.10.2017) மாண்புமிகு பால் வளத்துறை அமைச்சர் உயர்திரு.கே.டி.ராஜேந்திரபாலாஜி அவர்களின் திருக்கரங்களால் வழங்கப்பட்டது.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனவுத் திட்டமான இரண்டாம் வெண்மைப்புரட்சி நிறைவேறும் வண்ணம் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் பலனாக ஆவின் நிறுவனம் இதுவரை இல்லாத அளவுக்கு 32.83 இலட்சம் லிட்டரை 29.08.2017 அன்று கொள்முதல் செய்து சரித்திர சாதனை படைத்துள்ளது. அதேபோலவே மாநில அளவிலான விற்பனையும் தினசரி 21 இலட்சம் லிட்டரிலிருந்து 22 இலட்சமாக அதிகரித்துள்ளது.

2017 தீபாவளியை முன்னிட்டு இணையம் மற்றும் ஒன்றியங்களின் சார்பாக தற்காலிக விற்பனை நிலையங்கள் அமைக்கப்பட்டு சிறப்பான முறையில் விற்பனை நடைபெற்று வருகிறது.

இந்நிகழ்ச்சியில், ஆவின் நிர்வாக இயக்குநர் திரு.சி.காமராஜ்,இ.ஆ.ப., ஆவின் இணை நிர்வாக இயக்குநர் திருமதி.ஆர்.சீத்தாலெட்சுமி,இ.ஆ.ப., துணைப்பால் ஆணையர் திரு.உ.சண்முகராஜ்குமார் மற்றும் ஆவின் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**